8 பாடம்

# கண் காண்பதிலும் அதிகமாய்

*எதற்காகவாவது அல்லது யாருக்காவது நீ பயந்திருக்கிறாயா? அது ஒருவேளை பயங்கரச் சத்தமாகவோ, ஒரு ஆளாகவோ, அல்லது பயங்கரமான ஒரு சூழ்நிலை யாகவோ இருந்ததுண்டா? இன்றைய நமது வேதாகமக் கதையில் எலிசாவின் வேலைக் காரன் மிகவும் பயந்தான் என்று நாம் பார்க்கப் போகிறோம். ஏன் பயந்தான் என்று பார்ப்போமா?*

இஸ்ரவேல் நாடும் சீரியாவும் சண்டையிட்டுக் கொண்டிருந்தன. தேவன் இஸ்ரவேலருக்கு உதவிக்கொண்டிருந்தார்.

சீரிய அரசன் இஸ்ரவேல் அரசனைத் தாக்கத் திட்டம் இடும்போதெல்லாம் அவனது திட்டத்தை, தேவன் எலிசாவுக்குச் சொல்லுவார். எலிசாவும் இஸ்ரவேல் ராஜாவுக்குச் சொல்லி விடுவார். அதைக் கேட்டு இஸ்ரவேல் ராஜாவும், போகவேண்டாம் என்று எலிசா சொல்லும் இடங்களுக்குச் செல்லுவதில்லை. இதனால் வரும் ஆபத்துக்களுக்கு இஸ்ரவேல் ராஜா தப்பித்துக்கொண்டான். இஸ்ரவேல் ராஜாவைத் தாக்குவதற்காக மறைந்திருக்கும் சீரிய ராஜா ஏமாந்து போகவேண்டிய சூழ்நிலை ஒவ்வொரு முறையும் ஏற்பட்டது. இதனால் சீரிய ராஜா பயங்கரக் கோபம் கொண்டான்.



“நம் நாட்டில் யார் ஒற்றனாக இருந்து நமக்கு விரோதமாகச் செயல்படுகிறான்? எனப் பொருமினான். எனது திட்டமெல்லாம் எப்படி இஸ்ரவேல் அரசனுக்குத் தெரிகிறது? எனது வலையில் சிக்காமல் தப்பிவிடுகிறானே” என்று எரிச்சலோடு கேட்டான்.

“ராஜா, இங்கே யாரும் உளவு வேலை செய்து கொண்டிருக்கவில்லை. இஸ்ரவேல் நாட்டில் உள்ள எலிசா என்பவனுக்கு, நீர் உமது படுக்கை அறையில்

## மனன வசனம்

**கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப் பாளயமிறங்கி அவர்களை விடுவிக்கிறார்.**
**சங்கீதம் 34:7.**

பேசுவதைக்கூட அறியும் சக்தி உண்டு; உம்முடைய திட்டமெல்லாம் வீணாக அவன்தான் காரணம்'' என்று ஒருவன் கூறினான்.

'அவன் எங்கே இருக்கிறான் என்று பார்த்து வாருங்கள்' என்ற அரசனிடம், ''அவன் தோத்தானில் இருக்கிறான்'' என்று பதில் கூறினார்கள்.

'அப்படியானால், உடனே போய் தோத்தானைத் தாக்குங்கள்; எலிசாவைப் பிடித்து வாருங்கள்' என்று கட்டளையிட்டான்; தனது பெரிய படை மூலம் எலிசாவை சிறைப் படுத்திவிடலாம் என்று அந்த புத்தியற்ற அரசன் நினைத்தான். இது எலிசாவுக்குத் தெரியாமல் போய்விடுமா என்ன?

காலையிலே எலிசாவின் வேலையாள் வெளியே வந்தான். எதிரிகளால் தோத்தான் சூழப்பட்டிருப்பதைக் கண்டு மிரண்டான். எலிசாவிடம் ஓடினான். ''என் ஆண்டவனே! நமது பட்டணத்தைச் சுற்றிலும் இரதங்களும் குதிரைகளும் மிகுதியாக நிறைந்து இருக்கிறது; நாம் என்ன செய்வோம்?'' என்று புலம்பினான்.

தேவன் யார் பக்கத்தில் இருக்கிறார் என்பதை அவன் மறந்துவிட்டான்.

ஆனால், தேவன் தன் பக்கம் இருக்கிறார் என்று எலிசாவுக்குத் தெரியும். ''தேவனே, இவன் கண்களைத்திறந்தருளும்'' என்று எலிசா ஜெபித்தார். அப்போது வேலைக்காரனின் கண்களை தேவன் திறந்தார். தோத்தான் அக்கினிமயமான குதிரைகளாலும் இரதங்களாலும் நிறைந்திருப்பதை வேலையாள் பார்த்து வியந்தான். அவர்களோடு இருப்பவர்களைப் பார்க்கிலும், நம்மோடு இருப்பவர்கள் அதிகம் என்ற எலிசா, சீரிய வீரர்களுக்குக் கண்மயக்கம் ஏற்பட ஜெபித்தான்.



## செய்தி

**நாம் ஆபத்தில் இருக்கும்போது**

**தேவன் நமக்கு உதவுகிறார்.**

கண்மயங்கிய வீரர்களை அரசனிடம் அழைத்துச் சென்றான்.

எதிரிகளைக்கண்ட இஸ்ரவேல் அரசன், "இவர்களை ஒரே வெட்டாக வெட்டிப் போடலாமா?" எனக் கேட்டான். எலிசாவோ "இவர்களுக்கு நல்ல விருந்து செய்ய வேண்டும்" என்றார். தேவனுடைய கிருபை அளவற்றது.

தீங்கு செய்யவந்த எதிரிகளுக்கும் கிருபைசெய்து விருந்தளித்து அனுப்பச் சொன்னார் தேவன்.

ஆபத்தான சூழ்நிலையில் தேவன் எலிசா தீர்க்கதரிசியை அற்புதமாகக் காத்தார்.

அன்புக் குழந்தையே! உன்னையும் அவ்வாறே காத்துக்கொள்ள தேவன் ஆயத்தமாக இருக்கிறார். தேவன் உன்னை அதிகம் நேசிக்கிறார்.

*செய்முறை:* **எலிசாவின் வேலையாளின் கண்களை, தேவன் திறந்தபோது, அவன் கண்ட காட்சி இங்கே வாக்கியமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. மாறிக்கிடக்கும் வார்த்தைகளைச் சரியாக்கினால், பதிலைக் காணலாம்.**

### புதிர் 8

**குதிரைகளாலும்**

**அக்கினிமயமான**

**நிறைந்திருந்தது**

**தோத்தான்**

**இரதங்களாலும்.**

____________________

____________________

____________________